நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 208/2023

## P.W.6 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சித்ரா |
| தந்தை / கணவர் பெயர் | : | சதீஸ் |
| கிராமம் | : | பாலமலை |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW6 |
| வயது | : | 35 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2026–ஆம் வருடம், மார்ச் மாதம், 24–ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**( கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் பணிமாறுதலாகி சென்றுவிட்டதாலும், பொறுப்பு அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லாததாலும், சாட்சியும் வழக்கு தரப்பினர் ஆஜரில் இருப்பதை கருத்தில் கொண்டும், மேற்படி சாட்சியை மீண்டும் இந்த நீதிமன்றத்தில் ஆஜர் செய்வது சிரமம் ஏற்படும் என்பதாலும், அது நீதியின் நலனுக்கு உகந்தது அல்ல என்பதாலும், இந்த நீதிமன்றம் தாமாக சாட்சியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தது.)**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.07 PM.

1. நான் தற்போது பாலமலை ராமன்பட்டியில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 ராமசாமி எங்கள் ஊரை சார்ந்தவர். ஆஜர் எதிரிகளை தெரியும். இரு தரப்பினருக்கும் என்ன பிரச்சினை என்று எனக்கு தெரியாது. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. சம்பவத்தை பற்றி நான் கேள்விபடவும் இல்லை.

2. சுமார் 1 ½ வருடத்திற்கு முன்பாக போலீசார் எங்கள் ஊருக்கு வந்து சம்பவத்தை பற்றி விசாரணை செய்தார்கள். நான் அதற்கு எதுவும் தெரியாது என்று சொன்னேன். எழுதப்படாத ஒரு வெள்ளை பேப்பரில் என்னிடம் ஒரு கையெழுத்து வாங்கினார்கள். என்னுடன்வேறு யாரும் கையெழுத்து செய்யவில்லை. **(என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை அவசியம் இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 12.26 PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**